**தலைப்பு 215 – தொழிநுட்பக் கல்வி மற்றும் பயிற்சித் திணைக்களம் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2015 ஆம் ஆண்டு**

---

தலைப்பு 215 – தொழிநுட்பக் கல்வி மற்றும் பயிற்சித் திணைக்களத்தின் 2015 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி அறிக்கைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய அறிக்கைகள் என்பவற்றை உள்ளடக்கிய ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. மீளாய்வாண்டிற்கான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2016 திசெம்பர் 31 ஆம் திகதி திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்திற்கு வழங்கப்பட்டது. கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள், கருத்துரைகள் மற்றும் கண்டுபிடிப்புக்கள் என்பன கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான மீளாய்வு, கொடுக்கல் வாங்கல்கள் மாதிரிகளது போதியளவான செவ்வை பார்த்தல் என்பனவற்றின் அடிப்படையில் எழுந்தனவேயாகும். அவ்வாறான மீளாய்வினதும், செவ்வை பார்த்தலினதும் நோக்கெல்லையும் பரப்பும் என்னால் பெற்றுக்கொள்ளக் கூடியதாகவிருந்த பதவியணியினர், ஏனைய வளங்கள் மற்றும் காலம் என்பவற்றின் வரையறைக்குட்பட்டு இயலுமான அளவில் விரிவானதோர் கணக்காய்வு ஒன்றினை மேற்கொள்ளக் கூடிய முறையில் தயாரிக்கப்பட்டதாகும்.

1.2 **கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்புக்கள்**

---

ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்றுக்கள் என்பன இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 148, 149, 150 மற்றும் 152 ஆம் உறுப்புரைகள், ஏனைய சட்டரீதியான ஏற்பாடுகள், அரசாங்க நிதி மற்றும் நிருவாகப் பிரமாணங்களுக்கு இணங்க பேணுதல், தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தல் என்பன பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பாகும். மோசடிகள் அல்லது தவறுகள் காரணமாக ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்ற கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயபூர்வமானதாக சமர்ப்பிப்பதற்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளைத் திட்டமிடல், செயற்படுத்தல் மற்றும் பேணுதல் என்பன இப்பொறுப்பில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

2. **கணக்குகள்**

2.1 **ஒதுக்கீட்டுக் கணக்கு**

**மொத்த நிதியேற்பாடும் செலவினமும்**

திணைக்களத்திற்காக வழங்கப்பட்ட மொத்த தேறிய நிதியேற்பாடு ரூபா 1,964.25 மில்லியனாக இருந்ததுடன் மீளாய்வாண்டு இறுதியளவில் அதில் ரூபா 1,919.16 மில்லியன் பயன்படுத்தப்பட்டிருந்தது. இதன் பிரகாரம் திணைக்களத்திற்கு ஒதுக்கப்பட்ட மொத்தத் தேறிய நிதியேற்பாட்டில் ரூபா 45.09 மில்லியன் அதாவது 2.29 சதவீத நிதியேற்பாடு சேமிக்கப்பட்டிருந்தது. விபரம் கீழே காணப்படுகின்றது.

| செலவினம் | 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறு | | | தேறிய நிதி ஏற்பாட்டின் சதவீதமாக சேமிப்பு |
|---|---|---|---|---|
| | தேறிய நிதி ஏற்பாடு | பயன்பாடு | சேமிப்பு | |
| | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | |
| மீண்டுவருவன | 1,628.35 | 1,597.81 | 30.54 | 1.88 |
| மூலதனம் | 335.90 | 321.35 | 14.65 | 4.33 |
| மொத்தம் | **1,964.25** | **1,919.16** | **45.09** | **2.29** |

## 2.2 முற்பணக் கணக்கு

### 2.2.1 அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு

**பாராளுமன்றத்தால் விதிக்கப்பட்ட எல்லைகள்**

திணைக்களத்திற்குரிய 21501 ஆம் விடய இலக்கத்தின் கீழ் அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கிற்காக பாராளுமன்றத்தால் விதிக்கப்பட்டிருந்த எல்லைகள் மற்றும் உள்ளபடியான பெறுமதிகள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| செலவினம் | | பெறுவனவுகள் | | வரவு மீதி | |
|---|---|---|---|---|---|
| ஆகக் கூடிய எல்லை | உள்ளபடி யானது | ஆகக் குறைந்த எல்லை | உள்ளபடி யானது | ஆகக் கூடிய எல்லை | உள்ளபடி யானது |
| ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் |
| 60.32 | 53.09 | 56.32 | 66.27 | 200.00 | 108.91 |

## 2.3 பொது வைப்புக் கணக்குகள்

திணைக்களத்தின் கீழ் பின்வரும் 03 பொது வைப்புக் கணக்குகளில் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறு மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 32.81 மில்லியனாக இருந்தது. விபரம் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| வைப்புக் கணக்குகளின் இலக்கம் | 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதி |
|---|---|
| | ரூபா. மில்லியன் |
| 6000/0000/00/0001/0081/000 | 0.40 |
| 6000/0000/00/0016/0058/000 | 14.27 |
| 6000/0000/00/0018/0020/000 | 18.14 |
| மொத்தம் | **32.81** |

## 2.4 கணக்காய்வு அவதானிப்பு

தொழிநுட்பக் கல்வி மற்றும் பயிற்சித் திணைக்களத்தின் 2015 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்றுக்கள் மேற்கூறப்பட்ட 1.1 ஆம் பந்தியில் காண்பிக்கப்பட்டதன் பிரகாரம் முகாமைத்துவக் கணக்காய்வு அறிக்கையில் குறிப்பிடப்பட்ட கணக்காய்வு அவதானிப்புக்களுக்கு உட்பட்டு திருப்திகரமாகத் தயாரிக்கப்பட்டிருந்தது. அம் முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கையில் உள்ளடக்கப்பட்ட அவதானிப்புக்களில் பொருண்மையான மற்றும் முக்கியத்துவமான கணக்காய்வு அவதானிப்புக்கள் 3 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ளன.

## 3. பொருண்மையான மற்றும் முக்கியத்துவமான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 3.1 பதிவேடுகள் மற்றும் புத்தகங்கள் பேணப்படாமை

திணைக்களத்தினால் பின்வரும் பதிவேடுகள் பேணப்பட்டிருக்கவில்லை என தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்டது.

| | பதிவேடுகளின் வகை | உரிய பிரமாணம் |
|---|---|---|
| (i) | பொறுப்புக்கள் பதிவேடு | நிதிப் பிரமாணம் 214 |
| (ii) | கணனிகள், துணைக் கருவிகள் தொடர்பாக பதிவேடு | 2002 நவம்பர் 28 ஆந் திகதிய ஐஏஐ/2002/02 இலக்க திறைசேரிச் சுற்றறிக்கை |
| (iii) | அசையும் சொத்துக்கள் தொடர்பாக பதிவேடு | 2004 பெப்ரவரி 20 திகதிய 402(1) ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கை |
| (iv) | பிணைப் பதிவேடு | நிதிப் பிரமாணம் 891 |

### 3.2 கணக்காய்விற்கான சான்றுகள் இன்மை

பின்வரும் ஆவணங்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(அ) ஒதுக்கீட்டுக் கணக்கில் காட்டப்பட்டிருந்த 2015 ஆண்டின் போது திணைக்களத்திற்கு சொந்தமான 04 வாகனங்களுக்கு ஏற்பட்டிருந்த விபத்துக்களின் மூலம் ஏற்பட்ட மொத்தம் ரூபா 306,338 தொகையான நட்டங்கள் தொடர்பாக நிதிப் பிரமாணம் 104 இன் பிரகாரம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(ஆ) 1997 மற்றும் 2003 ஆண்டுகளின் போது வேலையிலிருந்து இடைநிறுத்தப்பட்டிருந்த இரண்டு உத்தியோகத்தர்களின் கூட்டுத்தொகை ரூபா 232,070 ஆன கடன் மீதிகளைப் பரிசோதனை செய்வதற்கு தேவையான கடன் கோவைகள்.

### 3.3 ஒதுக்கீட்டுக் கணக்குகள்

**பாதீட்டு முரண்கள்**

39 செலவு விடயங்கள் தொடர்பாக மிகையேற்பாடு செய்யப்பட்டிருந்தமையால் அச் செலவு விடயங்களுக்கு உரிய நிதியேற்பாட்டினை பயன்படுத்திய பின்னர் சேமிப்பு தேறிய நிதியேற்பாட்டில் 5 சதவீதம் முதல் 97 சதவீதம் வரையான வீச்சின் அளவை கொண்டிருந்தது.

### 3.4 அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு தொடர்பான இணக்கக் கூற்று

விடய இலக்கம் 21501 கொண்ட அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு தொடர்பான 2015 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு இணக்கக் கூற்றின் பிரகாரம் அத் திகதியில் உள்ளவாறு அறவீடுகள் நிலுவையாகக் காணப்பட்ட மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 109,051,233 தொகையாகக் காணப்பட்டதுடன் அவற்றில் ரூபா 6,929,021 தொகையான நிலுவை மீதி 01 வருடம் முதல் 20 வருடங்கள் வரையான கால வீச்சில் இருந்து கொண்டுவரப்பட்டிருந்த போதிலும், அந்நிலுவை கடன் மீதியை அறவீடு செய்யும் பின் தொடர் நடவடிக்கை பலவீன நிலையில் காணப்பட்டது.

**3.5 நல்லாளுகையும் கணக்களிப்பொறுப்பும்**

**கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு கூட்டம்**

2009 ஜூன் 09 திகதிய DMA/2009(i) ஆம் இலக்க முகாமைத்துவக் கணக்காய்வு சுற்றுநிருபத்தின் பிரகாரம் காலாண்டுக்கு ஒருமுறையேனும் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக் கூட்டங்கள் நடாத்தப்பட வேண்டும். எனினும் மீளாய்வாண்டின் போது 02 தடவைகள் மாத்திரம் கூட்டங்கள் நடாத்தப்பட்டிருந்தன.

**3.6 சொத்துக்கள் முகாமைத்துவம்**

திணைக்களத்தின் சொத்துக்கள் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட தெரிவுப் பரிசோதனையின் போது பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

**(அ) விளைவற்ற மற்றும் குறைவாகப் பயன்படுத்தப்படும் சொத்துக்கள்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) ஹோமாகம தொழில்நுட்பக் கல்லூரியில் மோட்டார் வாகனங்களை உயர்த்தும் இயந்திரம் சுமார் 10 வருட காலமாக விளைவற்றுக் காணப்பட்டது.

(ii) மன்னார் தொழிநுட்பக் கல்லூரி முச்சக்கர வண்டி பாடநெறிக்காக UNICEF உதவியின் கீழ் கிடைத்திருந்த ரூபா 442,380 பெறுமதியான முச்சக்கர வண்டி 2014 ஜனவரி மாதம் முதல் விளைவற்றுக் காணப்பட்டது.

(iii) தொழிநுட்ப மற்றும் தொழில்நுட்பவியல் கல்லூரிகளில் 23 உத்தியோகபூர்வ வாசஸ்தலங்கள் பயன்படுத்தப்படாமை அல்லது முறைப்படி திருத்த வேலைகள் மேற்கொள்ளப்படாமையின் காரணத்தால் சிதைவுற்ற நிலையில் காணப்பட்டது.

(iv) மன்னார் தொழில்நுட்பக் கல்லூரியின் நூலகத்திற்காக 2014 மற்றும் 2015 ஆண்டுகளின் போது ரூபா 148,923 தொகை பெறுமதியான புத்தகங்கள் கொள்வனவு செய்திருந்த போதிலும், கல்லூரியினால் நூலகப் பதவியணியினர் நியமனம் செய்யாமை மற்றும் இடவசதிகள் காணப்படாமை காரணமாக அப்புத்தகங்கள் விளைவற்றுக் காணப்பட்டது.

**(ஆ) வருடாந்த பொருட்கள் மெய்மையாய்தல் நடாத்துதல்**

2014 வருடாந்த பொருட்கள் மெய்மையாய்வுச் சபை அறிக்கைகளின் மூலம் சுட்டிக்காட்டியிருந்த பற்றாக்குறைகள், மிகைகள், அழித்தொழிக்க வேண்டியவை, திருத்த வேண்டியவை மற்றும் விற்பனை செய்யப்பட வேண்டிய பண்டங்கள் தொடர்பாக 2016 ஜூன் 30 திகதி வரையும் எதுவித நடவடிக்கையும் எடுத்திருக்கவில்லை. 2014 ஆண்டு தொடர்பாக 09 தொலிழ்நுட்ப மற்றும் தொழிநுட்பவியல் கல்லூரிகள் தொடர்பாக மெய்மையாய்வுச் சபை அறிக்கைகளின் மூலம் வெளிப்படுத்தப்பட்ட பற்றாக்குறைகள் மற்றும் மிகைகள் தொடர்பாக 2016 ஜூலை 30 திகதி வரை அவ்விடயங்கள் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை.

**(இ) வெளித்தரப்பினர்க்கு வழங்கியிருந்த சொத்துக்கள்**

திணைக்களத்தினால் பின்வரும் சொத்துக்கள் வெளித்தரப்பினர்க்கு முறைசாராத விதமாக விடுவிக்கப்பட்டிருந்ததுடன் அச் சொத்துக்களை விடுவித்திருந்த திகதி கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

| | சொத்துக்களின் வகை | அளவு | சொத்து அமைந்திருக்கும் இடம் | சொத்துக்கள் வழங்கியிருந்த நிறுவனம் | பெறுமதி |
|---|---|---|---|---|---|
| | | | | | ரூபா. |
| (i) | காணி | 30 ஏக்கர் | குளியாப்பிடிய தொழிநுட்பக் கல்லூரி | பல்கலைக்கழக கல்லூரி | 25,000,000 |
| | | 08 ஏக்கர் | - மேற்படி - | இளைஞர் படையணி | |
| | | 110 பேர்ச் | பெலிஅத்த தொழிநுட்பக் கல்லூரி | விளையாட்டு அமைச்சு | |
| | | 9.5 பேர்ச் | கேகாலை தொழிநுட்பக் கல்லூரி | தனிநபர் ஒருவருக்கு | |
| | | 6.5 பேர்ச் | - மேற்படி - | தனிநபர் ஒருவர் (அதிகார பூர்வீகத்துடன் வதிகிறார்) | |
| | | 10 ஏக்கர் | மொனறாகலை தொழிநுட்பக் கல்லூரி | ஊவாவெல்லஸ்ஸ தேசிய விளையாட்டு மைதானம் | |
| | | 05 ஏக்கர் | - மேற்படி - | இளைஞர் படையணி பயிற்சி நிலையம் | |
| | | 1.5 ஏக்கர் | - மேற்படி - | திறந்த பல்கலைக்கழகம் | |
| | | 01 ஏக்கர் | - மேற்படி - | தேறிய பயிலுனர் மற்றும் தொழிநுட்பப் பயிற்சி வழங்கல் அதிகார சபை | |
| (ii) | கட்டிடங்கள் | 04 | கண்டி தொழில்நுட்பக் கல்லூரி | இரத்தினக்கல் மற்றும் ஆபரண ஆராய்ச்சி நிறுவனம் | 1,155,000 |

**(ஈ) வாகனக் கட்டுப்பாடு**

திணைக்களத்தின் வாகனத்தொகுதி மீது பரிசோதனை மேற்கொண்ட போது பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) பெலிஅத்த தொழில்நுட்பக் கல்லூரிக்கு இணைக்கப்பட்டிருந்த வாகனம் ஒன்று 2011 மார்ச் 18 ஆந் திகதி அதனது என்ஜின் செயற்படாமல் போதல் மற்றும் 2011 ஜூன் 05 ஆம் திகதி அக்கல்லூரி வளவில் வாகனம் நிறுத்தப்பட்டிருந்த போது பின்பக்கக் கண்ணாடி உடைதல் ஆகிய சம்பவங்களின் காரணமாக வாகனத்தை உரிய நிலைக்கு கொண்டுவருவதற்காக ரூபா 1,973,825 தொகையொன்று செலவிடப்பட்டிருந்தது. நிதிப் பிரமாணம் 104(4) இன் பிரகாரம் 2014 ஜூன் 25 ஆந் திகதி மேற்கொள்ளப்பட்ட பரிசோதனை அறிக்கையின் பிரகாரம் நட்டத்தில் 40 சதவீதத்தை வாகனத்தின் குறிப்பிட்ட சாரதியிடம் அறவீடு செய்யப்பட வேண்டும் என தீர்மானிக்கப்பட்டிருந்தது. அத்தொகை 2016 மாதம் வரை குறிப்பிட்ட சாரதியிடம் அறவீடு செய்யப்பட்டிருக்கவில்லை. மேலும் இந்த நட்டத்தை ஒதுக்கீட்டுக் கணக்கில் நட்டங்கள் சேதங்களின் கீழ் காட்டப்பட்டிருக்கவில்லை.

(ii) 2012 செப்தெம்பர் 27 திகதி அம்பாறை ஹாடி தொழில்நுட்பக் கல்லூரியின் பணிப்பாளரினால் திணைக்களத்தின் மோட்டார் கோச் வகையான வாகனம் ஒன்றினை ஓட்டிச்சென்ற போது விபத்துக்குள்ளாகியிருந்தது. ஆனால் அவரிடம் மோட்டார் கோச் ஓட்டுவதற்கான சாரதி அனுமதிப்பத்திரம் ஒன்று காணப்படவில்லை. இந்த வாகனத்தை திருத்துவதற்காக ரூபா 1,000,000 தொகை செலவின மதிப்பீடு செய்யப்பட்டிருந்ததுடன் இது தொடர்பாக நிதிப்பிரமாணம் 104(4) இன் படியான அறிக்கை 2013 ஜனவரி 11 ஆந் திகதி சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. அவ்வறிக்கையின் பிரகாரம் நட்டத்தின் 50 சதவீதம் வாகனத்தை ஓட்டிச் சென்ற பணிப்பாளரிடம் அறவீடு செய்யப்பட வேண்டும் என தீர்மானிக்கப்பட்டிருந்தது. இது தொடர்பாக குறிப்பிட்ட பணிப்பாளர் அமைச்சின் செயலாளருக்கு மேன்முறையீடு ஒன்று சமர்ப்பித்திருந்தார். அந்த மேன்முறையீட்டின் மீது கவனம் செலுத்தி 50 சதவீத்தினை அந்த உத்தியோகத்தர்களிடம் அறவிடக் கூடாது என 2016 ஜூலை 15 திகதிய கடிதத்தின் மூலம் அங்கீகாரம் வழங்கியிருந்தார். அதன் பிரகாரம் ரூபா 1,000,000 தொகைக்கான மொத்த நட்டம் அரசுக்கு செலவுப் பொறுப்பொன்றாகியிருந்தது.

(iii) திணைக்களத்திற்கு சொந்தமான வாகனம் ஒன்றின் என்ஜின் 2012 மார்ச் மாதம் முதல் செயற்படாது காணப்பட்டது. இந்த கோளாரின் பின் 04 வருடங்களுக்கு மேற்பட்ட காலம் கடந்திருந்த போதிலும் 2016 ஜூன் 20 ஆந் திகதி வரையும் அந்த வாகனத்தை பழைய நிலைக்கு ஆக்குவதற்காக அல்லது அதனை அகற்றுவதற்கான நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(iv) குருநாகல், காலி மற்றும் அம்பாறை ஆகிய தொழில்நுட்பக் கல்லூரிகளின் கடமைகளுக்காக 3 வாகனங்கள் இணைக்கப்பட்டிருந்தன. அக் கல்லூரிகளின் உத்தியோகபூர்வ வாகனங்களைப் பயன்படுத்தும் பணிப்பாளர் மூவரும் மேற்கூறிய 03 வாகனங்களை அவர்களின் தனிப்பட்ட மற்றும் கடமை அலுவல்களுக்காக பயன்படுத்தியிருப்பதாக நாளாந்த ஓட்ட அட்டவணைகளை பரிசோதனை செய்த போது வெளிப்படுத்தப்பட்டது. எவ்வாறாயினும், அனைத்து பிரயாணங்களுக்காகவும் எரிபொருளுக்காக குறிப்பிட்ட கல்லூரியில் இருந்தே செலவிடப்பட்டிருந்ததுடன் அந்த உத்தியோகத்தர்களினால் 2015 ஆண்டின் போது ரூபா 95,340 வீதம் எரிபொருள் படியும் பெற்றிருந்தனர்.

(v) 2014 திசெம்பர் 01 திகதி மேலதிக பணிப்பாளர் நாயகம் (நிருவாகம் மற்றும் நிதி) இன் கடிதத்தின் பிரகாரம் குருநாகல் தொழிநுட்பக் கல்லூரியில் பதில் கடமையாற்றும் பணிப்பாளருக்கு 2014 ஜனவரி மாதம் முதல் செயற்படும் விதமாக மாதாந்தம் 140 லீற்றர்கள் எரிபொருள்களுக்காக கொடுப்பனவு செய்ய அங்கீகரிக்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் நிலுவை எரிபொருள் படியாக 2015 ஜனவரி 13 ஆந் திகதி ரூபா 191,637 தொகையொன்று செலுத்தப்பட்டிருந்தது. எவ்வாறாயினும் அக் காலப் பகுதியில் திணைக்களத்திலிருந்து வீடு வரை போக்குவரத்திற்கு பயன்படுத்தியிருந்த வாகனத்திற்கான எரிபொருளுக்காக திணைக்களத்தினால் செலவிடப்பட்டிருந்ததென வாகனத்தின் நாளாந்த ஓட்ட அட்டவணையை பரிசோதனை செய்த போது அவதானிக்கப்பட்டது. குறிப்பிட்ட நிலுவை எரிபொருள் படி செலுத்தும் போது மேற்கூறிய எரிபொருள் செலவு எதனையும் கழிக்காமல் மொத்தப் படியையும் மேற்கூறிய உத்தியோகத்தருக்கு செலுத்தப்பட்டிருந்தது.

**(உ) அரசாங்க வீடுகளின் கட்டுப்பாடு**

கணக்காய்விற்காக சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின் பிரகாரம் 29 தொழில்நுட்ப/ தொழில்நுட்பவியல் கல்லூரிகளில் 213 அரசாங்க வீடுகள் திணைக்களத்திற்குச்

சொந்தமானவையாக காணப்பட்டன. இது தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(i) தாபனவிதிக் கோவையின் அத்தியாயம் XIX பிரிவு 6.1 இன் பிரகாரம் அரசாங்க வீடுகளின் வாடகைக் காலம் 5 வருடங்களாகும். அத்துடன் தாபனவிதிக் கோவையின் அத்தியாயம் XIX பிரிவு 7.2 இன் பிரகாரம் வாடகைக் காலத்தை மிகைத்து வதியும் உத்தியோகத்தர்களிடம் தண்டப் பணம் ஒன்று அறவிடப்பட வேண்டியிருந்தது. 09 தொழில்நுட்ப/ தொழில்நுட்பவியல் கல்லூரிகளில் 18 உத்தியோகத்தர்கள் வாடகைக் காலத்தை மிகைத்து அரசாங்க வீடுகளில் வதிபவர்களாக இருந்தும் கூட அவ்வாறு தண்ட வாடகை ஒன்று அறவிடப்பட்டிருக்கவில்லை. அவ் உத்தியோகத்தர்களிடையே 10 வருடங்களுக்கு மிகையாக வதியும் 07 உத்தியோகத்தர்களும், 15 வருடங்களுக்கு மிகையாக வதியும் 2 உத்தியோகத்தர்களும் மற்றும் 20 வருடங்களுக்கு மிகையாக வதியும் இரண்டு உத்தியோகத்தர்களும் இருந்தனர். அந்த உத்தியோகத்தர்களை அரசாங்க வீடுகளில் இருந்து அகற்றுவதற்காக தேவையான சட்டரீதியான நடவடிக்கைகள் திணைக்களத்தினால் எடுத்திருக்கவில்லை.

(ii) திணைக்களத்திற்கு சொந்தமான அரசாங்க வீடுகளின் எண்ணிக்கை, அமைந்துள்ள இடம், அரசாங்க வீடுகளின் வகை, வதியும் உத்தியோகத்தர்களின் விபரம் மற்றும் செலுத்தும் வாடகை பற்றிய விபரங்கள் அடங்கிய பதிவேடுடொன்று மற்றும் காத்திருத்தல் பட்டியலொன்று தலைமை அலுவலகத்தினால் பேணப்படாமையினால் அரசாங்க வீடுகளில் கட்டுப்பாட்டு பலவீன மட்டத்தில் காணப்பட்டது.

(iii) அரசாங்க வீடுகள் தொடர்பாக தலைமை அலுவலகத்தில் பேணப்பட்டிருந்த கோவைகளில் அரசாங்க வீடுகள் பெற்றிருந்த உத்தியோகத்தர்கள் மற்றும் திணைக்களத் தலைவர்கள் இடையே உடன்படிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. தாபனவிதிக் கோவையின் XIX ஆம் அத்தியாயம் 6.6 ஆம் பிரிவின் பிரகாரம் அரசாங்க வீடு ஒன்று பெற்றுள்ள உத்தியோகத்தர் தான் அந்த வீட்டில் வதிவதற்கு வந்த திகதியும், அதனை விட்டுச் செல்லும் போது அந்த திகதியும், திணைக்களத் தலைவருக்கு மற்றும் வீடுகள் ஒதுக்கும் அதிகாரிக்கு அறிவிக்க வேண்டியிருந்த போதிலும் அந்த உத்தியோகத்தர்களினால் அவ்வாறு செயற்பட்டிருக்கவில்லை.

(iv) தாபனவிதிக் கோவையின் XIX ஆம் அத்தியாயத்தில் 6.8, 8.3 மற்றும் 8.4 பிரிவுகளின் பிரகாரம் உத்தியோகத்தர் ஒருவர் விலகிச் செல்லும் போது பொருட் பதிவேட்டின் பிரகாரம் உரிய முறையில் பொருட்கள் ஒப்படைக்கப்பட வேண்டுமெனினும் அனேகமாக அரசாங்க வீடுகளில் பொருட் பதிவேட்டை பரிசோதனை செய்து பொருட்கள் ஒப்படைக்கப்பட்டமைக்கும் உரிய முறையில் அவை கையேற்றப்பட்டமைக்கும் உரிய சான்றுகள் கோவைகளில் காணப்பட வில்லை.

(v) 2013 அக்தோபர் மற்றும் 2015 பெப்ரவரி ஆகிய மாதங்களில் குருநாகல் தொழில்நுட்பக் கல்லூரியில் கடமையாற்றிய இரண்டு பெண் உத்தியோகத்தர்கள் இடமாற்றம் பெற்றுச் சென்றிருந்த போதிலும் தற்காலிக அடிப்படையில் கால நீடிப்பு பெற்று குருநாகல் தொழில்நுட்பக் கல்லூரியில் காணப்படும் அரசாங்க வீடுகளில் வசித்து வந்தார்கள். உள்ளகக் கணக்காய்வு அறிக்கைகள் மூலம் மற்றும் அரசாங்க வீடுகள் தொடர்பான குழு அறிக்கையின் மூலமும் அந்த அரசாங்க வீடுகளை அவர்களுக்கு தொடர்ந்து வழங்காமல் இருப்பதற்கு விதந்துரைக்கப்பட்டிருந்த போதிலும்,

அதற்கு முரணாக கணக்காய்வுத் திகதியாகிய 2016 ஜூலை 31 திகதி வரை, அரசாங்க வீடுகளை திருப்பி ஒப்படைத்திருக்கவில்லை.

(vi) காலி, கண்டி, பதுளை, பண்டாரவளை மற்றும் ஹோமாகம ஆகிய தொழிநுட்பவியல் கல்லூரிகளில் 05 வருடங்களை மிகைத்த காலம் அரசாங்க வீடுகளில் வசித்து வந்த 14 உத்தியோகத்தர்களுக்கு அந்த அரசாங்க வீடுகளை விட்டுச் செல்லும் படி அறிவித்து கடிதங்கள் அனுப்பியிருந்த போதிலும் அந்த உத்தியோகத்தர்கள் தொடர்பாக தாபனவிதிக் கோவையின் XIX ஆம் அத்தியாயம் 9.1 ஆம் பிரிவின் பிரகாரம் அரசாங்க வீடு ஒன்றில் வசிப்பவரை அகற்றுவதற்கு 1971 இன் 3 ஆம் இலக்கம் மற்றும் 1974 இன் 04 ஆம் இலக்க சட்டங்களின் மூலம் திருத்தப்பட்ட 1969 இன் 7 ஆம் இலக்க அரசாங்க வீடுகள் (உரித்தினை திருப்பிப் பெறல்) சட்டத்தின் ஏற்பாடு மற்றும் தாபனவிதிக் கோவையின் XIX ஆம் அத்தியாயம் 7.1 ஆம் பிரிவின் பிரகாரம் உத்தியோகத்தர்களை வீடுகளில் இருந்து அகற்ற முடியும் எனினும் அவ்வாறு செய்திருக்கவில்லை.

மேற்கூறிய அவதானிப்புக்களின் பிரகாரம் அரசாங்க வீடுகளுக்காக விண்ணப்பங்கள் கிடைத்திருந்த போதிலும், வாடகை காலம் முடிவடைதல், இடமாற்றம் பெறல், ஓய்வு பெறல் போன்ற சந்தர்ப்பங்களில் வெற்றிடமாகும் அரசாங்க வீடுகளை காத்திருத்தல் பட்டியலில் இருக்கும் அரசாங்க உத்தியோகத்தர்களுக்கு அரசாங்க வீடுகளை வழங்குவதற்கு முடியாதிருந்தது.

**(ஊ) நூலகப் புத்தகங்கள் பேணப்படல்**

உள்ளகக் கணக்காய்வு அறிக்கைகளின் பிரகாரம் மாணவர்கள், பதவியணியினர் மற்றும் வெளி ஆலோசகர்களினால் நூலகத்தில் 795 புத்தகங்கள் வெளியே கொண்டு சென்றிருந்ததுடன் அப்புத்தகங்கள் 2015 திசெம்பர் 31 திகதி வரை நூலகத்திற்கு திருப்பி ஒப்படைத்திருக்கவில்லை. அந்த புத்தகங்களை திருப்பிப் பெறுவது தொடர்பாக திணைக்களத்தினால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 3.7 தீர்க்கப்படாத பொறுப்புக்கள்

திணைக்களத்தினால் மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு வீதவரிக்காக உள்ளூராட்சி நிறுவனங்களினால் சமர்ப்பிக்கப்பட்டிருந்த சிட்டைகளின் பிரகாரம் தலைமை அலுவலகத்தின் 03 வீதவரி இலக்கங்களுக்காக 1996 ஆண்டு முதல் ரூபா 7,821,152 தொகை மற்றும் 03 தொழிநுட்பவியல்/ தொழிநுட்பக் கல்லூரிகளில் 2013 ஆண்டு முதல் ரூபா 158,993 தொகையும் ஆக கூட்டுமொத்தமாக ரூபா 7,980,145 வீதவரி செலுத்த வேண்டியிருந்தது.

## 3.8 இணக்கமின்மைகள்

**சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணக்கமின்மைகள்**

தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்ட இணக்கமின்மைச் சந்தர்ப்பங்கள் கீழே பகுப்பாய்வு செய்து தரப்பட்டுள்ளது.

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் தொடர்பு | இணக்கமின்மை |
|---|---|
| **(அ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணக் கோவை** | |
| (i) நிதிப் பிரமாணம் 103(1) மற்றும் 104(1) | மருதானை மற்றும் வவுனியா தொழிநுட்ப/ தொழிநுட்பவியல் கல்லூரிகளில் 2010 நவம்பர் 15 திகதி மற்றும் 2015 திசெம்பர் 22 திகதிகளில் திருடர்கள் உள்ளே சென்று ஏற்படுத்திய நட்டங்கள் மற்றும் ஆதனங்கள் களவாடப்படல் தொடர்பாக ஏற்பட்ட நட்டம் தொடர்பாக நிதிப் பிரமாணங்களின் பிரகாரம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. |
| (ii) நிதிப் பிரமாணம் 104(3) மற்றும் 4 | 2014 மற்றும் 2015 ஆண்டுகளின் போது மருதானை, பொலன்னறுவை, இரத்மலானை, பதுளை மற்றும் திருகோணமலை தொழில்நுட்ப/ தொழிநுட்பவியல் கல்லூரிகளில் ஏற்பட்டிருந்த நட்டங்கள் மற்றும் சேதங்கள் தொடர்பாக ஆரம்ப விசாரணை அறிக்கைகள் தாமதித்து சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. |
| (iii) நிதிப் பிரமாணம் 115 | முன்னைய ஆண்டிற்கான கொடுப்பனவுகள் மேற்கொள்ளும் அதிகாரம் பெற்ற உத்தியோகத்தரின் சான்றிதழைப் பெறாமல் 05 சந்தர்ப்பங்களின் போது கூட்டுமொத்தமாக ரூபா 1,680,696 இற்கான கொடுப்பனவுகள் செய்யப்பட்டிருந்தது. |
| (iv) நிதிப் பிரமாணம் 210(1) | உள்ளுராட்சி நிறுவனங்களில் வீதவரி செலுத்தும் போது ரூபா 127,620 இற்கான கழிவு நலனைப் பெறுவதற்காக நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. |
| (v) நிதிப் பிரமாணம் 210(2) | 1572/25 ஆம் இலக்க அதிவிஷேட வர்த்தமானியின் பிரகாரம் 11 சந்தர்ப்பங்களில் குறிப்பிட்ட தினத்தில் மின்சார விலைப்பட்டியல் செலுத்தத் தவறியமையால் ரூபா 30,867 தண்டப் பணம் செலுத்தப்பட்டிருந்தது. |
| (ஆ) திறைசேரிச் செயற்பாட்டுக் சுற்றறிக்கைகள் | |
| 2015 நவம்பர் 23 திகதிய 06/2015 ஆம் இலக்க சுற்றறிக்கை | யாழ்ப்பாண தொழிநுட்பவியல் கல்லூரியில் மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு காணப்பட்ட ரூபா 224,437 தொகையான காசு மீதி திறைசேரிக்கு அனுப்பப்பட்டிருக்கவில்லை. |

## 3.9 வெளிநாட்டு உதவி செயற்திட்டங்கள்

### 3.9.1 துறைசார் தொழிற்திறன் அபிவிருத்தி செயற்திட்டம்

திணைக்களத்தினால் வெளிநாட்டு நிதியளிப்பின் கீழ் செயற்படுத்தப்பட்டிருந்த துறைசார் தொழிற்திறன் அபிவிருத்தி செயற்திட்டத்தின் மூலம் தொழிநுட்ப மற்றும் தொழிநுட்பவியல் கல்லூரிகளின் கட்டிடங்களை நவீன மயப்படுத்துதல், உபகரணங்கள் கொள்வனவு செய்தல் மற்றும் பயிற்சி வழங்களுக்காக மீளாய்வாண்டிற்காக ரூபா 225.61 மில்லியனிற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன. மீளாய்வாண்டின் போது ரூபா 147.14 மில்லியன் அதாவது 65.22 சதவீதம் பயன்படுத்தப்பட்டிருந்தது. இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2014 ஆண்டின் போது பூர்த்தி செய்வதற்கு உத்தேசித்திருந்த மாத்தறை, கேகாலை மற்றும் மட்டக்களப்பு தொழில்நுட்பக் கல்லூரிகளின் மறுசீரமைப்பு மற்றும் நவீன மயப்படுத்தல் வேலைகளுக்காக ரூபா 103.66 மில்லியன் நிதி ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன. திட்டமிடப்பட்டவாறு அவ்வேலைகள் பூர்த்தி செய்தல் தாமதித்ததன் காரணமாக அதற்காக ரூபா 55.94 மில்லியன் தொகை அதாவது ஒதுக்கப்பட்டிருந்த ஏற்பாடுகளில் 53.96 சதவீதம் பயன்படுத்தப்பட்டிருந்தது. அச் செயற்திட்டத்திற்காக மீளாய்வாண்டின் போது ரூபா 40.00 மில்லியன் நிதி ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்ததுடன், அவற்றில் ரூபா 38.56 மில்லியன் தொகை செலவிடப்பட்டு செயற்திட்டம் பூர்த்தி செய்யப்பட்டிருந்தது.

(ஆ) மீளாய்வாண்டின் செயல்நடவடிக்கைத் திட்டத்தின் படி பண்டாரவெல, ஹோமாகம மற்றும் சம்மாந்துறை தொழிநுட்ப கல்லூரிகளின் கட்டிடங்களை மறுசீரமைப்பதற்காக ரூபா 90.00 மில்லியன் நிதியேற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன. மீளாய்வாண்டு இறுதியளவில் அவற்றில் ரூபா 46.86 மில்லியன் அதாவது ஒதுக்கப்பட்டிருந்த நிதியேற்பாடுகளில் 52.07 சதவீதம் பயன்படுத்தப்பட்டிருந்தது. இதன் பிரகாரம் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த நிதியேற்பாடுகளில் ரூபா 43.14 மில்லியன் அதாவது ஒதுக்கப்பட்ட நிதியேற்பாடுகளில் 47.93 சதவீதமான நிதியேற்பாடுகளைப் பயன்படுத்துவதற்கு திணைக்களத்திற்கு முடியாதிருந்தது.

(இ) மீளாய்வாண்டிற்கான செயல்நடவடிக்கைத் திட்டத்திற்கும் பெறுகைகள் திட்டத்திற்கும் ஏற்ப பண்டாரவெல, ஹோமாகம மற்றும் சம்மாந்துறை தொழிநுட்பக் கல்லூரிகளுக்கு உபகரணங்கள் கொள்வனவு செய்வதற்காக ரூபா 40 மில்லியன் நிதியேற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருந்த போதிலும், அந்த ஏற்பாடுகளில் ரூபா 6.78 மில்லியன் அதாவது 16.9 சதவீதம் மாத்திரம் பயன்படுத்தப்பட்டிருந்தது.

(ஈ) மீளாய்வாண்டிற்கான செயல்நடவடிக்கைத் திட்டத்தின் படி வெளிநாட்டு தொழில்களுக்காக உதவி வழங்கும் நிகழ்ச்சித் திட்டம் ஒன்றிற்காக ரூபா 3 மில்லியன் நிதியேற்பாடு செய்யப்பட்டிருந்த போதிலும், மீளாய்வாண்டு இறுதி அளவிலும் அந்நிகழ்ச்சித் திட்டம் அமுல்ப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(உ) செயல்நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் மனித வள அபிவிருத்திக்கு ((HRD) புதிய கல்வி பதவியணியினர் (Effective Teaching Staff) இனை நியமனம் செய்வதற்காக அரச சேவை ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்டிருக்க வேண்டும் என குறிப்பிடப்பட்டிருந்தது. மீளாய்வாண்டின் போது அரச சேவை ஆணைக்குழுவில் இருந்து குறிப்பிட்ட அங்கீகாரத்தை பெறுவதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. மீளாய்வாண்டின் போது மனித வள அபிவிருத்திக்காக ரூபா 5.76 மில்லியன் நிதியேற்பாடு செய்யப்பட்டிருந்த போதிலும் ஒப்பந்த அடிப்படையில் சேர்க்கப்பட்டிருந்த ஆலோசகர்கள் 16 பேருக்கு ரூபா 5.67 மில்லியன் தொகை சம்பளமாக செலுத்தப்பட்டிருந்தது.

**3.9.2 தொழிநுட்ப மற்றும் தொழிநுட்பவியல் கல்லூரிகளில் மோட்டார் இயந்திர வேலைத் தளங்களை நவீன மயப்படுத்தலும் அபிவிருத்தி செய்தலும்**

மூன்று தொழிநுட்ப மற்றும் தொழிநுட்பவியல் கல்லூரிகளில் மோட்டார் இயந்திர வேலைத் தளங்கள் நவீன மயப்படுத்துவதற்கும் அபிவிருத்தி செய்வதற்கும் உபகரணங்கள் வழங்கல் மற்றும் ஆலோசகர்களுக்கு பயிற்சி வழங்கல் என்பன நேரடியாக கொரியா உதவியின் கீழ் நடத்தப்பட்டிருந்தது. அப் பாடநெறி நடத்தப்படும் வேலைத் தளங்கள் மற்றும் வகுப்பறைகளை திருத்தும் வேலைகள் மற்றும் நவீன மயப்படுத்தல் இலங்கை அரசாங்க நிதியத்திலிருந்து மேற்கொள்ளப்பட்டிருந்தது. இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) இச் செயற்திட்டத்திற்காக கொரிய சர்வதேச ஒத்துழைப்பு நிறுவனத்தினால் 03 மில்லியன் அமெரிக்க டொலர்கள் மற்றும் இலங்கை அரசாங்கத்தினால் 0.5 மில்லியன் அமொரிக்க டொலர்கள் மதிப்பீடு செய்யப்பட்டிருந்தது. இந்த செயற்திட்டம் 2013 ஆண்டு முதல் 2015 ஆண்டு வரையான காலப்பகுதியில் பூர்த்தி செய்ய தீர்மானித்திருந்தது. 2013 ஆண்டு வரை குறிப்பிட்ட வேலைத் தளங்களின் உபகரணங்களை பொருத்துவதற்கு தேவையான விதமாக நவீனமயப்படுத்தலும் திருத்த வேலையும் மேற்கொள்ளப்படாமையால் 2015 ஆண்டு இறுதியளவில் செயற்திட்டத்தின் வேலைகளை பூர்த்தி செய்வதற்கு முடியாதிருந்தது. அது தவிர மோட்டார் இயந்திர டிப்ளோமா பாடநெறிக்காக கண்டி தொழிநுட்பவியல் கல்லூரியின் 45 மாணவர்கள் தெரிவு செய்யப்பட்டிருந்த போதிலும் மருதானை தொழிநுட்பவியல் கல்லூரியில் 24 மாணவர்கள் சேர்க்கப்பட்டிருந்தனர்.

(ஆ) மோட்டார் இயந்திரவியல் பயிற்சிக்காக புது வகையான 05 வாகனங்களும் செயற்திட்டத்தின் விடயங்களுக்காக ஒரு மோட்டார் வாகனமும் கொரியா சர்வதேச ஒத்துழைப்பு நிறுவனத்தினால் 98,994 அமெரிக்க டொலர்கள் தொடர்புடைய 5 கல்லூரிகளுக்கு மற்றும் தலைமை அலுவலகத்திற்கு வழங்கப்பட்டிருந்தது. அதற்காக சுங்கவரி மற்றும் ஏனைய செலவுகளாக கூட்டுத்தொகை ரூபா 55,090,000 ஆன செலவுகள் உரிய அமைச்சினால் செலவிடப்பட்டிருந்தது. 2016 ஏப்ரல் 30 ஆந் திகதி வரை அவ்வாகனங்களின் உரிமையும் அமைச்சுக்கு கையளிக்கப்பட்டிருக்கவில்லை.

**3.10 செயலாற்றுகை**

2015 வருடாந்த பாதீட்டு மதிப்பீடு மற்றும் செயல்நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் திணைக்களத்தின் செயலாற்றுகை மீதான தகவல்கள் கீழே தரப்பட்டுள்ளன.

**(அ) தொழிநுட்ப/ தொழிநுட்பவியல் கல்லூரிகளுக்கு மாணவர்களைச் சேர்த்தல்**

2014 நவம்பர் 12 திகதிய DTET/05/01/02(i)/2014 ஆம் இலக்க பணிப்பாளர் நாயகத்தின் கடிதத்தின் மூலம் 2015 ஆண்டிற்காக மாணவர்கள் சேர்க்கும் இலக்கு 2014 ஆண்டின் போது சேர்க்கப்பட்ட மாணவர் எண்ணிக்கையை விட குறைந்தது 20 சதவீதத்தினால் அதிகரிப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் என அறிவிக்கப்பட்டிருந்தது. திணைக்களத்தின் முகாமைத்துவத் தகவல் பிரிவினால் சமர்ப்பித்திருந்த அறிக்கைகளின் படி 2014 ஆண்டின் போது சேர்க்கப்பட்ட மாணவர்களுடன் ஒப்பீடு செய்யும் போது மீளாய்வாண்டின் போது 3000 மாணவர்கள் அதாவது 13 சதவீதத்தினால் குறைந்திருந்தமை அவதானிக்கப்பட்டது.

2014 ஆம் வருடத்துடன் ஒப்பிடும் போது 2015 ஆண்டின் போது 9 தொழில்நுட்ப/ தொழில்நுட்பவியல் கல்லூரிகளில் மாணவர்களின் எண்ணிக்கை 326 இனால் அதிகரித்திருந்த போதிலும், 30 தொழில்நுட்ப/ தொழில்நுட்பவியல் கல்லூரிகளில் 3,325 மாணவர்கள் குறைந்திருத்தல் அறியப்பட்டிருந்தது. கொள்கைசார் தீர்மானத்தின் மீது 2014 ஆண்டின் போது 2 குறுகிய கால ஆங்கில பாடநெறிகள் வரையறையுடன் நடத்துவதற்கும், மாணவர்களை முடிந்த அளவில் இரு

கைகளினாலும் செய்யும் கைத்தொழில்களுடன் தொடர்புடைய தொழிற் கல்வி மீது கவனம் செலுத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டதாகவும், அதன் பிரகாரம் நிரந்தர ஆங்கில ஆசிரியர் குழுவொன்று காணப்படும் சில இடங்களில் மாத்திரம் ஆங்கிலம், கணனி, வர்த்தகம் போன்ற பாடநெறிகளுக்காக வரையறுக்கப்பட்ட எண்ணிக்கையான மாணவர்கள் மாத்திரம் சேர்க்கப்பட்டிருந்ததெனவும் விஷேடமாக இரு கைகளினாலும் தொழில் கிடைக்க கூடிய தொழில்சார் பாடநெறிக்கு மாணவர்கள் முனைக்கப்படும் போக்கு படிப்படியாக சமூகத்தில் இருந்து குறைவடைதல் மாணவர் குறைவடைதல் தொடர்பாக நேரடியாக பாதிக்கப்பட்டது என திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் கணக்காய்விற்கு அறிவித்திருந்தார்.

மேற்கூறிய பணிப்பாளர் நாயகத்தின் கடிதத்தின் பிரகாரம் சேர்க்கப்பட்ட மாணவர்களின் எண்ணிக்கை 2014 ஆண்டை விட 2015 ஆம் ஆண்டில் 20 சதவீதத்தினால் அதிகரிப்பதற்காக இரண்டு தொழில்நுட்பக் கல்லூரிகளுக்கு மாத்திரம் இயலுமாக இருந்தது. 29 தொழிநுட்பவியல்/ தொழிநுட்பக் கல்லூரிகளில் 2014 ஆண்டில் சேர்க்கப்பட்ட மாணவர்கள் எண்ணிக்கையுடன் ஒப்பீடு செய்யும் போது 2015 ஆம் ஆண்டின் போது 3 சதவீதம் முதல் 54 சதவீதம் வரையான வீச்சளவில் குறைவடைந்திருந்தது.

**(ஆ) பாடநெறிகள் நடாத்துதல்**

2014 அக்தோபர் 03 திகதி மற்றும் 2014 திசெம்பர் 19 திகதி வர்த்தமானியின் மூலம் பிரசுரிக்கப்பட்ட GSI விண்ணப்பத்தின் மூலம் அங்கீகரிக்கப்பட்ட சிங்களம், தமிழ், ஆங்கிலம், கொரியன் மற்றும் யப்பான் மொழிகள் மூலமான பாடநெறிகள் ஆரம்பிப்பது இலக்காக இருந்தது. அவ் இலக்குசார் பாடநெறிகள் 19 தொழிநுட்பவியல்/ தொழிநுட்பக் கல்லூரிகளில் நடத்துவது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) 150 பாடநெறிகளுக்காக நாடு பூராகவும் 39 தொழிநுட்பவியல்/ தொழிநுட்பக் கல்லூரிகளில் இருந்து 1,044 வகுப்புகளுக்கு மாணவர்கள் சேர்க்கப்படுவதற்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டிருந்தன. மாணவர் சேர்க்கும் புள்ளிவிபரங்களை பரிசோதனை செய்த போது வர்த்தமானியின் மூலம் பிரசுரிக்கப்பட்ட 103 பாடநெறிகளுக்காக 663 வகுப்புக்கள் மாத்திரம் ஆரம்பிக்கப்பட்டிருந்தன. அதன் பிரகாரம் ஆரம்பிக்க வேண்டும் என இலக்கு வைத்திருந்த பாடநெறிகளில் 47 பாடநெறிகள் மற்றும் 381 வகுப்புக்கள் ஆரம்பிப்பதற்கு முடியாதிருந்தது.

(ii) 2014 நவம்பர் 12 திகதி DTET/05/01/02(i)/2014 ஆம் இலக்க பணிப்பாளர் நாயத்தின் கடிதத்தின் மூலம் ஒவ்வொரு பாடநெறிக்கும் சேர்க்கப்பட வேண்டிய குறைந்த மாணவர்களின் எண்ணிக்கை குறிப்பிடப்பட்டிருந்தது. மீளாய்வாண்டின் போது அந்த குறைந்த அளவு மாணவர் எண்ணிக்கை இன்றி தொழிநுட்பவியல்/ தொழிநுட்பக் கல்லூரிகளில் கைத்தொழில் சாலைகள்/ ஆய்வு கூடங்களை அடிப்படையாகக் கொண்ட 41 பாடநெறிகளுக்காக 98 வகுப்பறைகளை அடிப்படையாகக் கொண்டு 12 பாடநெறிகளுக்கான 62 வகுப்புக்கள் ஆரம்பிக்கப்பட்டிருந்தன. இந்த குறைந்த பட்ச மாவணர்கள் எண்ணிக்கையும் இன்றி மாணவர்கள் சேர்க்கப்பட்டு பாடநெறிகள் நடாத்துவது தொடர்பாக பணிப்பாளர் பின்வரும் காரணங்கள் சமர்ப்பித்திருந்தார்.

- நிரந்தர, போதனாசிரியர்கள் இருப்பதன் காரணமாக குறைந்த பட்ச மாணவர்களுடன் சில பாடநெறிகளை நடத்துவதற்கு நேரிட்டமை.
- மாணவர்கள் கேள்வி மிகைவும் குறைவாக இருத்த போதிலும் தச்சன் வேலை, மேசன் வேலை, பொருத்து வேலை ஆகிய தொழில்களுடன் சம்பந்தப்பட்ட பாடநெறிகளுக்காக அனேகமான கல்லூரிகளில் பாரிய அளவிலான இயந்திரங்களுடனான வேலைத் தளங்கள் காணப்படல்

மற்றும் அவற்றை தொடர்ச்சியாக நடத்துவதில் கடுமையான தேவையின் காரணமாக குறைந்த மாணவர் எண்ணிக்கையுடன் ஆரம்பித்தல்

- இயந்திர உபகரணங்களை உடைய வேலைத் தளம் ஒன்றினை மாணவர் இன்மையால் ஒரு வருடத்திற்கு மூடுவதற்கு நேரிட்டால் மீண்டும் பயன்படுத்த முடியாத நிலையில் துருப்பிடித்தல், தேய்வடைந்தல் ஏற்படுவதினால் குறைந்த மாணவர்கள் எண்ணிக்கையை கொண்டேனும் நடாத்துவதற்கு நேரிட்டுள்ளமை.
- ஏதேனும் ஒரு வருடத்தில் ஏதேனும் ஒரு வேலைத் தளத்தினை கொண்டுள்ள பாடநெறி ஒன்று மூடப்படின் எதிர்வரும் வருடங்களில் மாணவர்கள் அப் பாடநெறிக்கு இனையாமை காணப்படுவதினால் குறைந்த எண்ணிக்கையுடனேனும் நடாத்த நேரிட்டுள்ளமை.
- குறைந்த எண்ணிக்கையுடனேனும் பாடநெறிகளை ஆரம்பித்து நடாத்துவதன் மூலம் எதிர்வரும் ஆண்டுகளின் போது மாணவர் சேர்வதற்கான ஊக்குவிப்பு நோக்குடன் நடாத்துவதற்கு நடவடிக்கை எடுத்தமை

**(இ) பரீட்சைப் பெறுபேறுகள்**

------------------------------------

திணைக்களத்தின் புள்ளிவிபர தகவல் பகுதியில் இருந்து பெற்ற தகவல்களின் பிரகாரம் கடந்த ஆண்டின் போது நடத்தப்பட்ட 38 பாடநெறிகளில் பரீட்சைப் பெறுபேறுகள் தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) 38 பாடநெறிகளுக்காக சேர்க்கப்பட்டிருந்த மாணவர்களின் எண்ணிக்கை 16,220 பேரில் 10,637 மாணவர்கள் பரீட்சைக்கு தோற்றியிருந்த போதிலும், 6,307 மாணவர்கள் மாத்திரம் பரீட்சையில் சித்தியடைந்திருந்தனர். 3,025 மாணவர்கள் குறை சித்தியடைந்திருந்தனர். இதன் படி சேர்க்கப்பட்டிருந்த எண்ணிக்கையுடன் ஒப்பீடு செய்யும் போது சித்தியடைந்த மாணவர் எண்ணிக்கைகள் 39 சதவீதமாக காணப்பட்டதுடன் குறை சித்தியடைந்த மாணவர்கள் எண்ணிக்கை 19 சதவீதமாகும்.

(ii) 2014 ஆண்டின் போது நடத்தப்பட்ட டிப்ளோமா பாடநெறி தொடர்பான பரீட்சை பெறுபேறுகள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்க வில்லை.

(iii) 2014 ஜனவரி 28 திகதிய TVET/1/ச.லே/2004/1 கொண்ட தொழிற்கல்வி மற்றும் பயிற்சி வழங்கும் அமைச்சுச் செயலாளரின் சுற்றுநிருபத்தின் பிரகாரம் பாடநெறி ஒன்றில் நலன்பெற வேண்டியோர் எண்ணிக்கை பாடநெறி இறுதியில் 70 சதவீதத்தை விட குறைவாக இருக்கக் கூடாது என சுட்டிக்காட்டியிருந்த போதிலும், அந்த இலக்கினை நெருங்குவதற்கு திணைக்களம் தவறியிருந்தது.

(iv) கடந்த வருடம் நடத்தப்பட்ட பாடநெறிக்காக பரீட்சைகளின் மூலம் 29 தொழிநுட்பவியல்/ தொழிநுட்பக் கல்லூரிகளில் 16 பாடநெறிகளுக்குத் தோற்றிய அனைத்து மாணவர்களும் சித்தியடைந்திருந்ததுடன் அந்த மாணவர்களின் எண்ணிக்கை 485 ஆகும். அவற்றில் 149 மாணவர்கள் NCECP – Gas and arc welder பாடநெறியிலும் 84 மாணவர்கள் NC in Technology (Civil) பாடநெறியும் கற்றிருந்தனர்.

**(ஈ) மாணவர்கள் பாடநெறிகளை விட்டுச் செல்லல்**

கணக்காய்விற்கு சமர்ப்பித்திருந்த தகவல்களின் பிரகாரம் 38 பாடநெறிகளுக்காக சேர்க்கப்பட்டிருந்த ரூபா 16,220 மாணவர்களில் 10,637 மாணவர்கள் பரீட்சைக்கு தோற்றியிருந்தனர். அவற்றில் 5,583 மாணவர்கள் அதாவது 34 சதவீதத் தொகையொன்று பாடநெறியை விட்டுச் சென்றிருந்தனர் என அவதானிக்கப்பட்டது. அதனுடன் ஒப்பிடும் போது 2013 ஆண்டின் மாணவர்களில் 33 சதவீதம் பாடநெறியை விட்டுச் சென்றிருந்தனர். ஏனைய பாடநெறிகளில் இருந்து மாணவர்கள் விட்டுச் செல்லல் தொடர்பான தகவல்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படவில்லை.

**(உ) பாடநெறிகளின் தராதரம்**

2013 பெப்ரவரி 26 ஆந் திகதி 01/2013 இலக்க மூன்றாம் நிலை மற்றும் தொழில் கல்வி ஆணைக்குழுவின் தொழிற்தகைமை சுற்றறிக்கையின் பிரகாரம் அனைத்து பாடநெறிக்கும் தராதரம் அளிக்கப்பட வேண்டுமெனினும் கணக்காய்வுத் திகதியாகிய உள்ளவாறு 2016 ஆகஸ்ட் 01 திகதியில் 39 தொழிநுட்பவியல்/ தொழிநுட்பக் கல்லூரிகளில் நடத்தப்படும் 670 பாடநெறிகளில் 200 பாடநெறிகள் தராதரமளிக்கப்பட்டிருக்கவில்லை. இதன் காரணமாக தேசிய நிலையில் சான்றிதழ் ஒன்றினைப் பெறும் சந்தர்ப்பத்தை இழந்துள்ளதென கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது.

**3.11 முறைசாராக் கொடுக்கல் வாங்கல்கள்**

திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்தின் அங்கீகாரம் இன்றி 2015 ஆகஸ்ட் 17 ஆம் திகதி நடைபெற்ற பொதுத்தேர்தல் விடயங்களுக்காக மொனறாகலை தொழில்நுட்பக் கல்லூரியின் மோட்டார் வாகனம் ஒன்று 2015 ஜூலை 23 திகதி முதல் 2015 ஆகஸ்ட் 30 திகதி வரை 3807 கிலோ மீற்றர்கள் மற்றும் 421.6 லீற்றர்கள் எரிபொருள் பயன்படுத்தப்பட்டிருந்தது என ஓட்ட அட்டவணைகளின் பரிசோதனை செய்த போது அவதானிக்கப்பட்டது.

**3.12 அரச பெறுகைகள் வழிகாட்டல் நடைமுறையில் இருந்து விளகல்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) திணைக்களத்திற்காக தொலைக்காட்சிப் பெட்டியொன்று, கையடக்கத் தொலைபேசியொன்று மற்றும் tablet pc ஒன்று என்பன மொத்தம் ரூபா 365,784 தொகையில் 2015 திசெம்பர் 14 திகதி கொள்வனவு செய்யப்பட்டிருந்தது. இக் கொள்வனவுகள் அரச பெறுகைகள் வழிகாட்டல் கோவையின் ஏற்பாடுகளின் பிரகாரம் நடைபெற்றிருக்கவில்லை. கொள்வனவு செய்திருந்த tablet pc உபகரணம் கணக்காய்வுத் திகதியாகிய 2016 மே 31 திகதி வரை குறிப்பிட்ட நோக்கங்களுக்காக பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(ஆ) மீளாய்வாண்டின் போது தளபாடங்கள் கொள்வனவு செய்வதற்காக ரூபா 365,784 தொகை செலவிடப்பட்டிருந்தது. தொடர்புடைய கோவையை பரிசோதனை மேற்கொண்ட போது அந்த தளபாடங்களுக்கு மாதிரிகள் தயாரித்திருக்கவில்லை. அத்துடன் தொழிநுட்ப மதிப்பாய்வு குழுவின் அல்லது பெறுகைகள் குழுவின் விதப்புரைகளை பெற்றுக்கொள்ளாமல் அரச பெறுகைகள் வழிகாட்டல் கோவையின் ஏற்பாடுகளில் இருந்து விலகி மேற்கொள்ளப்பட்டிருந்தது.

(இ) மீளாய்வாண்டின் போது களஞ்சியத்திற்கு கிடைத்திருந்த 07 பதவியணியின் கதிரைகள் மற்றும் 30 கருத்தரங்குக் கதிரைகள் முறையே ரூபா 47,250 மற்றும் ரூபா 178,500 கொள்வனவு செய்யப்பட்டிருந்தது. அக் கதிரைகள் உரிய

மாதிரிகளுக்கு இணங்க வழங்கியிருக்காத போதிலும் அதற்காக வழங்குனருக்குப் பணம் செலுத்தப்பட்டிருந்தது.

(ஈ) அரச பெறுகைகள் வழிகாட்டல் கோவையின் 8.13.4 வழிகாட்டலின் பிரகாரம் மருதானை தொழிநுட்பவியல் கல்லூரியில் சுயமாக அசையும் வேலைத் தளத்தின் திருத்த வேலைக்காக தயாரிக்கப்பட்டிருந்த மொத்தக் கிரய மதிப்பீடு ரூபா 4,914,215 ஆக இருந்தது. மதிப்பீட்டில் அடங்கியுள்ள 20 வேலை விடயங்களுக்காக ரூபா 1,042,597 தொகை மற்றும் ஆரம்ப மதிப்பீட்டில் அடங்காத 27 வேலை விடயங்களுக்காக மதிப்பீட்டுப் பெறுமதியை மிகைத்து ரூபா 989,240 தொகையாக மொத்தம் ரூபா 2,031,837 தொகை ஒன்று மிகையாகச் செலுத்தப்பட்டிருந்தது.

## 3.13 மனித வள முகாமைத்துவம்

### (அ) அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரும் உள்ளவாறான பதவியணியினரும்

2015 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறான பதவியணியினர் தொடர்பான நிலைமை பின்வருமாறாகும்.

| | ஊழியர் வகை | அங்கீகரிக் கப்பட்ட பதவியணி யினர் | உள்ளபடியான பதவியணி யினர் | வெற்றிடங் களின் எண்ணிக ்கை | மிகைகளின் எண்ணிக் கை |
|---|---|---|---|---|---|
| (i) | சிரேஷ்ட நிலை | 313 | 685 | 754 | 126 |
| (ii) | மூன்றாம் நிலை | 144 | 24 | 120 | - |
| (iii) | இரண்டாம் நிலை | 1,272 | 849 | 426 | 03 |
| (iv) | ஆரம்ப நிலை | 1,167 | 1,014 | 182 | 29 |
| | **மொத்தம்** | **3,896** | **2,572** | **1,482** | **158** |

இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) மிகை பதவியணியினர்களின் எண்ணிக்கை 158 ஆக இருந்த போதிலும், அவர்களில் 124 பேர் 2016 பெப்ரவரி 28 திகதி அளவில் தொழிநுட்பவியல் மற்றும் தொழில்நுட்பக் கல்விக் கல்லூரிகளின் வெற்றிடங்களுக்கு இணைக்கப்பட்டனர். அங்கீகரிக்கப்பட்ட பதவியணியின் பிரகாரம் உதவி/ பிரதி பணிப்பாளர் (திட்டமிடல்) பதவி 1 காணப்பட்ட போதிலும் அப் பதவிக்கு உரித்தான பெண் உத்தியோகத்தர் 2015 ஜனவரி 05 திகதி முதல் 5 வருட காலத்திற்கு வெளிநாட்டுக்குச் சென்றிருந்தமையால் அப் பதவிக்கு வேறு ஒரு பெண் உத்தியோகத்தர் நியமிக்கப்பட்டிருந்தார். அது தவிர மூன்றாம் நிலை மற்றும் ஆரம்ப நிலையின் 32 மிகை பதவியணியினர் அங்கீகரிக்கப்பட்டிருக்காத பதவிகளுக்கு நியமனம் செய்யப்பட்டிருந்தனர்.

(ii) மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு தொழில்நுட்பவியல் மற்றும் தொழில்நுட்பக் கல்லூரியினால் 211 விரிவுரையாளர்களுக்கான 310 விரிவுரையாளர்கள் பதவிகள் வெற்றிடமாகக் காணப்பட்டது. அதற்காக வெளி விரிவுரையாளர்கள் சேர்க்கப்பட்டிருந்தனர். இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றது.

- திணைக்களத்தின் கீழ் காணப்படும் தொழிநுட்பவியல்/ தொழிநுட்பக் கல்லூரிகளில் உரிய குறிப்பிட்ட விடயங்களுக்காக வெளிவாரி விரிவுரையார்கள் சேர்க்கப்படல் அக் கல்லூரியின் பணிப்பாளர்/ அதிபரினால் மேற்கொள்ளப்பட்டிருந்தது. அவ் விரிவுரையாளர்களுக்கான கொடுப்பனவு செய்வதற்காக நிதியேற்பாடுகள் தலைமை அலுவலகத்தினால் பெறப்படுவதாகவும் அக்கொடுப்பனவுகள் கல்வித் தகைமையின் அடிப்படையில் வழங்கப்படுவதால் கணக்கிடப்பட்ட விரிவுரையாளர் கொடுப்பனவுகளின் பிழையற்ற தன்மையை பற்றி பரிசோதனையொன்று தலைமை அலுவலகத்தினால் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை என கணக்காய்வில் அவதானிக்கப்பட்டது.

- தொழிநுட்பவியல்/ தொழிநுட்ப கல்லூரியின் அதிபர்/ பணிப்பாளரின் விருப்பத்தின் பிரகாரம் வெளி விரிவுரையாளராகச் சேர்த்துக்கொள்ளப்படுவதினால் அக் கல்லூரியினால் சேர்க்கப்பட்ட விரிவுரையாளர்களின் கல்வி மற்றும் தொழில்சார் தகைமை மற்றும் விரிவுரைகள் நடத்தும் போது காணப்படும் வினைத்திறமை மற்றும் ஆக்கவளம் தொடர்பாக மதிப்பீடு ஒன்று மேற்கொள்ளப்படுவதில்லை என அவதானிக்கப்பட்டது. உள்ளகக் கணக்காய்வு அறிக்கைகளின் பிரகாரம் சில வெளி விரிவுரையாளர்கள் ஆட்சேர்ப்பிற்கான தகைமைக்கு உரிய சான்றிதழ்கள் உண்மையான பிரதி என உரிய நிறுவனங்களினால் உறுதிப்படுத்தியிருக்கவில்லை.

(ஆ) இலங்கை தொழிநுட்ப கல்வி சேவையில் கட்டிடக் கலை தொழில் பற்றிய விரிவுரையாளர் பதவிக்கு 1987 திசெம்பர் 01 திகதி முதல் சேவைக்கு நியமனம் பெற்றிருந்த அலுவலர் ஒருவரின் சேவையை நிரந்தபரப்படுத்தலும், பதவி உயர்வும் மற்றும் சம்பளம் அதிகரிப்பு வழங்கல் ஆகிய சந்தர்ப்பங்களில் ஏற்பட்ட முறைகேடுகள் தொடர்பாக தேவையான நடவடிக்கை எடுப்பதற்கு 2016 செப்தெம்பர் மாதம் வரை திணைக்களத்தினால் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(இ) தாபனவிதிக் கோவையின் III ஆம் அத்தியாயத்தின் 3:8:2 ஆம் பிரிவின் பிரகாரம் ஒவ்வொரு தரத்திலுள்ள சேவையிடங்களில் சேவை செய்ய வேண்டிய உச்ச காலப் பகுதியின் படி இடமாற்றம் வழங்கப்பட வேண்டும். எனினும் உள்ளகக் கணக்காய்வு அறிக்கைகளின் பிரகாரம் மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு 07 தொழிநுட்பவியல்/ தொழிநுட்பக் கல்லூரிளில் கல்விசார் பதவியணியில் 18 உத்தியோகத்தர்களும் கல்விசாரா பதவியணிகளில் 40 உத்தியோகத்தர்களும் 10 வருடங்களை விட மிகையான காலம் ஒரு இடத்தில் சேவையாற்றியுள்ளனர்.